
# ஸ்ரீ சத்ய சாய்



# சத்ய நாராயண கதை

***Tamil***

# ஸ்ரீ சத்ய சாய், சத்ய நாராயண கதை பாராயண முறை

1. பிராத்தனை அறையில் உட்காரவும்.
2. விளக்கு அல்லது மெழுகுவர்த்தி ஏற்றவும்.
3. ஊதுவத்தி ஏற்றவும்.
4. விபூதி, பழங்கள் அல்லது இனிப்பு வகையை பிரசாதமாக இறைவன் முன் வைக்கவும்.
5. தனியாகவோ அல்லது கூட்டமாகவோ பூஜையை செய்யவும்.

## பூஜைக்கான விவரங்கள்

1. ஓம் என்ற மந்திரத்தை மூன்று முறை கூறவும்.
2. பிள்ளையார் மந்திரத்தை கூறவும்.
3. குரு மந்திரத்தை கூறவும்.
4. சத்யநாராயணா கதையை 1- 5 வரை படிக்கவும்.
5. சாய் காயத்ரி மந்திரத்தை மூன்று முறை கூறவும்.
6. பிள்ளையார் பாடலை முதலாகக் கொண்டு இரண்டு மூன்று பஜனை பாடல்களைப் பாடவும்.
7. சர்வ தர்ம மந்திரத்தை பாடவும்.
8. ஆரத்தி எடுக்கவும்.
9. சமஸ்த லோக மந்திரத்தை ஜெபிக்கவும்.
10. விபூதி மந்திரத்தை சொல்லி கொண்டு விபூதி பிராசாதத்தை அனைவருக்கும் அளிக்கவும்.

**குறிப்பு :** மேல் கூறிய விவரங்களை பின்பற்ற முடியா விட்டாலும் **ஸ்ரீ சத்ய சாய் சத்ய நாராயண கதையை** 1-5 வரை படிக்கவும்.

இந்த கதையை பௌர்ணமி தினங்களில்,
வியாழக்கிழமைகளில் அல்லது தினமும் படிக்கலாம்.

**நினைத்ததை நிறைவேற்றும் தன்மையுடைய இந்த கதையை முழு நம்பிக்கையுடன் யார் படித்தாலும், அவர்களுக்கும் அருளும், ஆசியும் பொழிந்து, அவர்களின் வேண்டுதல் நிறைவேறும்.**

# கணேச வந்தனம்

**வக்ர துண்ட மஹா காய**
**சூரிய கோடி சம ப்ரபா**
**நிர்விக்னம் குருமே தேவா**
**சர்வ கார்யேஷு சர்வதா**

*வளைந்த துதிக்கையும் பலமான உடலும் கொண்ட இறைவனே, பத்து இலட்சம் சூரிய கிரணங்களும் உன் ஒளிக்கு சமமாகாதவனே உன்னிடம் வேண்டுகிறேன் எந்தன் நல்ல காரிங்களில் ஏற்படும் தடைகளை எப்போதும் நீக்குவாய்.*

# குரு வந்தனம்

**குரு பிரம்மா குரு விஷ்ணு**
**குருதேவோ மகேஸ்வரா**
**குரு சாக்ஷாத் பர ப்ரம்மா**
**தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ**

*உயர்ந்த ஆசிரியருக்கு வணக்கங்கள் அவரே பிரம்மா, விஷ்ணு மற்றும் மகேஸ்வரானாவிக்க குருவே உயர்ந்த பிரம்மன்.*

# பகுதி 1 – தெய்வீகக் குழந்தைப் பருவமும் நிகழ்வுகளும்

தென்னந்தியாவில் ஆந்திர பிரதேசத்தில் புட்டபர்த்தி என்னும் சிறிய கிராமத்தில் பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா பிறந்தார். அவரது தந்தை திரு பெத்த வெங்கப்ப ராஜீ. தெய்வத்தாயின் பெயர் ஈஸ்வராம்பா.

தாய் ஈஸ்வராம்பா மிகவும் இறைபக்தியுள்ளவர். இறைவனை மகிழ்ச்சியை செய்வதற்கு ஏதாவது தவங்களை எப்போதும் செய்து கொண்டுயிருப்பார். நாராயணன் அவரது உண்மையான தெய்வ அன்பை அறிந்து மிகவும் மகிழ்ச்சியுற்று மறுபடியும் அவதாரம் எடுத்து திருவிளையாடல் புரிய முடிவெடுத்தார். எனவே பிரியமுள்ள ஈஸ்வரம்பாவை தன் தாயாகவும், பெத்த வெங்கப்ப ராஜீவை தன் தந்தையாகவும் தேர்ந்தெடுத்தார்.

ஈஸ்வரம்பாவின் சான்றின் படி ஒரு சமயம் அவர்கள் கிணற்றிலிருந்து நீர் இறைத்து கொண்டிருக்கும் போது, பளபளக்கும் நீலநிற ஒளி விண்ணிலிருந்து இறங்கி அவரது கருப்பையுள் நுழைந்ததாக நம்பப்படுகின்றது. அவர்கள் நினைவிழந்து கீழே விழுந்தார். இறை அருளால் ஏதாவது நிகழுமானால் அதற்காக அச்சப்பட வேண்டியதில்லை என்று அவரது மாமியார் அவரை எச்சரித்திருந்தார். இந்த ரகசியத்தையாருக்கும் வெளிப்படுத்தவில்லை. பகவானின் பிறப்பு ஓர் திருவிளையாடல் ஈஸ்வரம்பா மகாசமாதி அடைவதற்கு சில நாட்கள் முன்பு அவரது அனுபவத்தை பகிர்ந்து கொள்ளுமாறு இறைவனே அவரிடம் கூறினார்.

ஈஸ்வரம்பாவின் பேறுகாலம் நெருங்கும் வேளையில் வீட்டில் உள்ள வாத்தியங்கள் தாமாகவே தெய்வ ஒலிகளை ஏற்படுத்தின. பறை ஒலிக்க, வீணை மீட்ட தாளங்கள் போட எல்லாரும் தெய்வீக இறையினாலும், மணத்தினாலும், தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்டனர்.

ஒரு வழியாக 1926-ஆம் வருடம் நவம்பர் 23-ந் தேதி காலை புலர்ந்தது. சிவனுக்கே உரிய திங்கள் கிழமை வளமிகுந்த வருடமாகவும் ஒளி நிரம்பிய மாதமாகவும் திகழ்ந்தது. தாய் ஈஸ்வரம்பாவின் மாமியார் சத்ய நாராயணா பூஜையை அப்பொழுது தான் முடித்து விட்டு மருமகளுக்கு பிரசாதத்தை அளித்தார். அந்த பிரசாதத்தை சாப்பிட்ட சில நிமிடங்களில் சாய் நாராயணா அவதரித்தார். அக்குழந்தை மிகவும் அழகாக இருந்தது. குழந்தைக்கு சத்ய நாராயணா என்று பெயர் சூட்டப்பட்டது.

ஒரு நாள் குழந்தை சத்யா உறங்கிக் கொண்டிருக்கும் போது குழந்தையின் அடியில் உள்ள துணி நகருவதை அங்குள்ள பெண்கள் கண்டனர்.

துணியை தூக்கிப்பார்த்தால் அடியில் இறைவனிடமிருந்துபாம்பு ஒன்று நெளிந்து சென்று மறைந்து விட்டிருந்தது. பாம்பின் அரசன்ஆதிசேஷன் வைகுந்தத்தில் தன் தலைவனை காணாததால் இங்குஇறங்கி வந்து விட்டான் போலும்.

சிறுவன் சத்ய நாராயணா அசைவ உணவை தொட்டதுமில்லை, அவ்வுணவு சமைக்கும் இல்லங்களுக்கும் சென்றதில்லை. அவ்வூரில் வாழ்ந்த கர்ணம் சுப்பம்மா என்ற அமைதியான பெண்மணி சத்யாவை மிகவும் நேசித்து அன்பை பொழிந்தாள். சத்யாவும் பெரும் பொழுதை அவர்கள் வீட்டிலேயே கழித்தார். இந்த அவதாரத்தில் ஒரு யசோதா வேண்யிருந்தது போலும்.

சத்யாவின் பெற்றோர்வீட்டை நோக்கி யாசகம் பெற யார் வந்தாலும் வெறுங்கையோடு அனுப்ப படுவதில்லை. சில நேரங்களில் சத்யா தன் உணவை தியாகம் செய்து யாசித்து வந்தவருக்கு திருப்தியாக உணவளித்து விடுவார். இவரது இந்த தாராளத்தை கண்டு இவரது தாயும் சகோதரியும் கோபம் கொள்வார்கள். சிறிது நேரங்கழித்து இவரைஉண்பதற்காக அவர்கள் அழைத்தால் தன் தாமரை கைகளை அவர்க்ள் மூக்கில் வைத்து வாசனையை உணரச் சொல்வார். அவர்கள் மிகவும் மணமுள்ள ருசியான உணவின் மணத்தை சிறுவனின் சிவந்தகைகளில் இருப்பதை உணர்ந்து எங்கே உணவருந்தினாய் என்று கேட்க ஒரு முதியவர் உணவளித்தார் என்று கூறி விடுவார்.

சிறுவனாக இருக்கும் போதே சத்யா தனது உண்மையான அன்பு என்ற பண்பை வெளிப்படுத்தினார். தனது நண்பர்கள் வருந்துவதை அவரால் பொறுத்து கொள்ள இயலாது. அவர்களை மகிழ வைக்கும் இனிப்புகள், பென்சில், ரப்பர் போன்றவற்றை தோற்றுவிப்பார். சிறுவர்களை எல்லாம் ஒன்று கூட்டி பொம்மை வீடு கட்டி, கடவுளின் படங்களை மாட்டி பஜனைப் பாடல்களை அவர்களுக்கு கற்று தருவார்.

ஆரம்பக் கல்விக்கு பிறகு சத்யாவை புக்கபட்டிணம் என்ற கிராமத்திலுள்ள துவக்கப்பள்ளியில் சேர்த்தனர் அங்கும் பள்ளி சிறுவர்களிடையே சத்யா மிகவும் பிரபலமானார். மெஹபூப் கான் என்ற ஆசிரியர் சத்யாவை மிகவும் நேசித்தார். ஒரு நாள் வேறொரு ஆசிரியர் தான் கூறும் பாடத்தை சத்யா எழுதி கொள்ளாததை கண்டுபிடித்தார். அதற்காக சத்யாவை பெஞ்ச் மீது ஏறி நிற்கும்படி தண்டனை விதித்தார். அந்த ஆசிரியின் வகுப்பு முடிந்து விட்டது.

வகுப்பு மணியும் ஒலித்தது. அப்படியும் அந்த ஆசிரியரால் நாற்காலியை விட்டு எழுந்திருக்க முடியவில்லை.

சத்யா இன்னும் பெஞ்சின் மீது நின்று கொண்டிருந்தார். அடுத்த ஆசிரியர் மெஹபூப் கான்வந்து விட்டார்.

கான் தனது ஆசிரிய நண்பர் அருகில் சென்ற போது அவருக்கு மிகவும் இக்கட்டாக இருந்தது. தனக்கு நாற்காலியிலிருந்து எழுந்திருக்க இயலவில்லை என்று கூறி கண்ணீர் மல்கினார். கான் வகுப்பை கண்ட போது இவர்கள் பேசுவதை கேட்ட சிறுவர்கள் கேலியாக சிரிப்பதை கண்டார்.

பிரியமுள்ள சத்யா பெஞ்ச் மீது நின்று கொண்டு இந்த நாடகத்தை ரசித்து கொண்டிருப்பதை கான் பார்த்து மனம் வெதும்பினார். மற்ற ஆசிரியரிடம் நாற்காலியிலிருந்து பிரிய வேண்டுமென்ற சத்யாவை இறங்க சொல்ல வேண்டும் என்று கூறினார். ஏற்கனவே மிகவும் அவமானமடைந்திருந்த ஆசிரியர் சத்யாவை பெஞ்சிலிருந்து இறங்குமாறு கூறினார். உடனேயே அவரும் நாற்காலியிலிருந்து விடுபட்டார். இவ்வாறாக சத்யா தான் யாரென்பதை வெளிப்படுத்த ஆரம்பித்தார்.

ஒரு நாள் ஒரு வண்டியோட்டி தன் குதிரையை தொலைத்து விட்டான். எங்கு தேடியும் கிடைக்கவில்லை யாரோ ஒருவன் வண்டிக்காரனிடம் பக்கத்து பள்ளியில் ஒரு தெய்வீகச் சிறுவன் இருப்பதாகவும், அவனால் குதிரையைப் பற்றிய விவரங்கள் கூற இயலும் என்று கூறினான்.

சீரடி அவதாரம் போன்று, சத்யா குதிரைக்காரனை மென்மையாக அழைத்து அவனது குதிரை கிராமத்தின் வெளியே மாந்தோப்பில் புல்மேய்த்துக் கொண்டிருப்பதாக கூறினார். சத்யா கூறியபடி வண்டிக்காரன் தன் குதிரையை கண்டுபிடித்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தான்.

அன்றியிலிருந்து எல்லா குதிரை வண்டிக்காரர்களும் சத்யாவை அவர்கள் வண்டியில் உட்கார்ந்து நிறைய வியாபாரம் பெருக ஆசீர்வதிக்க வேண்டுமென வேண்டினார்.

ஸ்ரீ சத்ய சாய் சத்ய நாராயண கதையின்
முதல் பகுதி இனிதே நிறைவடைகிறது.
ஸ்ரீ சாயியைப் பணிவோம். அனைவரும் அமைதியைப் பெறுவோம்.

# பகுதி 2 - சாய்பாபாவின் இலட்சியம் ஆரம்பமாகிறது

1940 ஆம்ஆண்டு மார்ச் மாதம் 8-ந் தேதி சத்யா அலறிக் கொண்டு மயங்கி விழுந்தார். அவரது வலது கால கட்டை விரலை கெட்டியாக பிடித்து கொண்டிருந்தார். வீட்டில் இருப்பவர்கள் அவரை தேள் கடித்து விட்டதாக நினைத்தனர்.

ஆனால் உண்மையில் சத்யா தன் உடலிலிருந்து வெளியேறி ஒரு பக்தனின் உயிரை காப்பதற்காக சென்றிருந்தார் சுற்றியிருப்பவர்கள் என்பதை அறியமாட்டார்கள். ஏனெனில் அதற்கு முன்னர் அம்மாதிரி சத்யாவின் இந்த நிலைக்கு சற்றும் பொருந்தாதபடி ஏதும் அவர் நிகழ்ந்தியதில்லை. அவர்கள் தேளினை தேடிக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரத்திற்கு பிறகு சத்யா அமைதியாக கண்களைத் திறந்தார். மறு நாளும் சத்யா மயங்கி விழுந்தார். பிறகு கண்திறந்த போது சுற்றி இருப்பவர்களை பார்த்து, அந்த கிராமத்தின் எல்லை தெய்வமான முத்தியாளம்மன் மிகவும் கோபாமாக இருப்பதாகவும் அவர்களில் ஒருவர் உடனே தேங்காய் உடைத்து, கற்பூரம் ஏற்ற வேண்டுமெனக் கூறினார்.

தேங்காய் உடைக்கப்பட்ட பொழுது, சத்யா தன்வீட்டிலிருந்து கொண்டே தேங்காய் மூன்று துண்டுகளானதை கூறினார். உண்மையாகவே இவ்வாறு நிகழ்ந்திருந்தது. சத்யாவை துர்தேவதைகள் ஆட்டி படைப்பதாக நினைத்தனர். உடனே அவர்கள் சத்யாவை குணப்படுத்த மருந்துக்களையும், மூலிகைகளையும் பயன்படுத்தினார். சிலர் சத்யா பைத்தியமாகி விட்டதாக நினைத்து பெற்றோரைச் கூப்பிட்டு அனுப்பினர்.

அங்கு வந்த பெற்றோர்கள் மகன் சத்யாவின் நிலை கண்டு மிகவும் அதிர்ச்சியுற்றனர். என்ன செய்வதென்று புரியாமல் மந்திரவாதியிடம் அழைத்து சென்றனர்.

கொடூரமான முறையில் பேயோட்டும் அந்த மந்திரவாதி இளம் சத்யாவின் தலையில் கூரிய கத்தியால் மழித்து எலுமிச்சை சாற்றை ஊற்றி சாரமான பொடியைத் தூவினான். சத்யாவின் முகமும் கண்களும் பெரிதாக வீங்கின.

மந்திரவாதியிடம் பேயோட்டுவதற்காக சத்யாவை ஒப்படைத்திருந்தால் சத்யாவின் தாய்க்கும் தமக்கைக்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை.

அதைக் கண்ட சத்யா தன் சகோதரியை அழைத்து அருகிலுள்ள ஒரு முலிகையைப் பறித்து அதன் சாற்றை தன் கண்ணில் ஊற்றுமாறு கூறினார்.

மந்திரவாதியிடம் சத்யாவை விட்டுவிடுமாறும் பிறகு அழைத்துக் கொண்டு வருதாகவும் மிகவும் வாதாடினார்.

மந்திரவாதி விருப்பமின்றி சத்யாவை விடுவித்தான். சத்யாவின் யோசனைப்படி மூலிகையின் சாற்றை கண்களில் சிறிதளவு ஊற்றிய சிறிது நேரத்தில் கண்கள் குறும்பு கொப்பளிக்கும் இயல்பு நிலைக்கு வந்தன.

நாளடைவில் சத்யா கிராமத்திலுள்ள சிறுவர்களுக்கு வேதத் தத்துவங்களை விளக்க ஆரம்பித்தார். குரு சீரடி சாய் பாபாவைப் பற்றியும் கூறினார். அவரது தந்தை பெத்த வெங்கப்ப ராஜீவுக்கு இது பொறுக்கவில்லை.

கையில் பிரம்புக் குச்சியுடன் சத்யாவின் மேல் பேய் சூழ்ந்துள்ளதாக நினைத்து அதை விரட்ட குச்சியுடன் சத்யாவை நெருங்கினார். “நீ யார் உண்மையை கூறு” என்று சத்யாவை தந்தை கேட்டார். அதற்கு சத்யா மிகவும் அமைதியாகவும், தீர்மானமாகவும் “நான் சாய்பாபா உங்கள் மனத்தையும், வீட்டையும் சுத்தமாக வைத்திருங்கள். அப்பொழுது தான் நான் என்றும் அங்கு குடியிருப்பேன்” என்று கூறினார்.

பெத்த வெங்கப்ப ராஜீவின் கையிலுள்ள குச்சி கீழே விழுந்தது. ஆச்சரியத்துடன் நீ சாய்பாபா என்றால் உடனே நிரூபிக்கவும் என்று கூறினார். சத்யா கை நிறைய மல்லிகைப் பூக்களை எடுத்து தரையில் வீசியபோது. அவைகள் “சாய்பாபா” என்று ஒதுங்கிப் எழுதினார் போல் அமைந்தன.

அன்றிலிருந்து கிராமங்களிலுள்ள மக்கள் சத்யாவை சாய்பாபா என்று அழைக்கலானார்கள். அவரை பக்தியுடன் வணங்கி, ஒவ்வொரு வியாழக் கிழமையும் சிறப்பு வழிப்பாடுகள் நிகழ்த்தி ஆராதித்தனர்.

ஸ்ரீ சத்ய சாய் சத்ய நாராயண கதையின்
இரண்டாம் பகுதி இனிதே நிறைவடைகிறது.
ஸ்ரீ சாயியைப் பணிவோம். அனைவரும் அமைதியைப் பெறுவோம்.

# பகுதி – 3 பால சாயின் அற்புத விளையாட்டு

சத்யாவின் மறைந்துள்ள சக்தியை கிராமத்து மக்கள் உணர்ந்து மிகவும் மரியாதையுடன் ஸ்வாமி என்று அழைக்கலானார்கள்.

ஒரு சமயம் ஸ்வாமியும், அவரது குடும்பத்தினர்களும், ஹம்பியில் உள்ள ஸ்ரீ விருப்பாக்ஷா கோவிலுக்கு சென்றனர். அங்கு வந்தவுடன் ஸ்வாமி மற்றவர்களுடன் கோவிலின் உள்ளே செல்லவில்லை. அவர் கோவிலின் வாசற் கதவின் அருகில் நின்று கொண்டிருந்தார். கருவறையில் பூஜை நடந்து கொண்டிருக்கும் போது சத்யா லிங்கத்தின் முன் நிற்பதைக் கண்டு அனைவரும் வியப்படைந்தனர்.

அவர்கள் ஸ்வாமியை கோவில் வாசலில் விட்டிருந்தனர். எவ்வாறு அவர் கருவறைக்குள் வந்திருக்க முடியும் என்று வியந்து வெளியே வந்து பார்த்தனர். அங்கு சத்யா செவ்விதழில் தவழும் புன்னகையுடன் தனியாக வானத்தை நோக்கி நின்றிருப்பதைக் கண்டு அனைவரும் வியந்து அவர் காலில் விழுந்து வணங்கினார்.

ஒரு நாள் ஸ்வாமி பள்ளியிலிருந்து திரும்பி வந்து புத்தகப்பையை கீழே எறிந்து மாயை விலகி விட்டது இனி நான் உங்களுடையவன் அல்ல பக்தர்கள் எனக்காக காத்து கொண்டிருக்கின்றனர் என்று கூறினார். ஸ்வாமியின் அண்ணி உள்ளேயிலிருந்து வந்த போது ஸ்வாமிகளின் தலையை சுற்றி உள்ள ஒளி வட்டத்தைக் கண்டு அதன் பிரகாசத்தை காண இயலாமல் கண்களை முடிக் கொண்டார்.

ஸ்வாமியின் தாயார் மகனிடம் “தாங்கள் பக்தர்களுக்காக எங்களைவிட்டு செல்வதாக இருந்தால் புட்டபர்த்தியிலிருந்து கொண்டு அருள் பொழிந்து அனைவரையும் காக்க வேண்டும்” என்று விண்ணப்பித்தார். தாயின் அன்புக் கட்டளையை ஸ்வாமி ஏற்று கொண்டார்.

வெகுகாலமாக ஸ்வாமி அவர்கள், கர்ணம் சுப்பம்மா அவர்களின் பெரிய வீட்டிலேயே தங்கி, தன்னைக் காணவரும் எண்ணற்ற பக்தர்களை அனுக்கிரஹித்து வந்தார். சுப்பம்மாவே ஸ்வாமியின் தீவிர பக்தையாகவும் இருந்தார். நாளடைவில் பக்தர்கள்கூட்டம் பெருகி விட்டன.

சில நேரங்களில் பக்தர்களுக்கு வேண்டிய உணவு குறைந்து விட்டால் சுப்பம்மா ஸ்வாமியிடம் உதவுமாறு கேட்பார்.

ஸ்வாமி இரண்டு தேங்காய்களுடன் சமையலறைக்குள் சென்று அவற்றை உடைத்து இளநீரை உணவின் மீது தெளிப்பார். உடனே பக்தர்கள் அனைவருக்கும் போதுமான உணவு பெருகி மீதமும்இருக்குமாறு அமைந்து விடும்.

பக்தர்கள் கூட்டம் நாளும் பெருகி வருவதால் சுப்பம்மாவின் வீட்டின் அருகே ஒரு பஜனைக் கட்டிடம் கட்ட விரும்பினார். ஒரு சமயம் ஸ்வாமி சுப்பம்மா வீட்டில் தங்கியிருக்கும் போது லக்சுமைய்யா என்ற பூசாரி தன் நண்பருடனும் மன நலம் குறைந்த நண்பரின் மனைவியுடனும் வந்திருந்தார். நண்பரையும் அவரின் மனைவியையும் சித்ராவதி நதியின் கரையில் காத்திருக்குமாறு கூறினார்.

பூசாரி சுப்பம்மாவின் வீட்டினுள் நுழைந்த போது ஸ்வாமியைக் கண்டார். அவரை யாரென்று அறியாமல் பூசாரி அவரிடம் நோய்களை தீர்த்தும் சிறுவன் இங்கிருப்பதாக அறிந்தேன் என்னை அவரிடம் அழைத்து செல்வாயா என் நண்பனையும் அவரது மன நலம் குறைந்த மனைவியையும் அழைத்து வந்துள்ளேன் என்று கேட்டார்.

ஸ்வாமி அந்தத் தம்பதிகளை அழைத்து வருமாறு கூறினார். அவர்களிடம் குளித்து விட்டு பக்தர்களோடு வந்து அமருமாறு கூறினார். ஸ்வாமி எல்லோருக்கும் பிரசாத்தை விநியோகித்தார். புனித விபூதியை தோற்றுவித்து அந்த மனநலம் குறைந்த பெண்ணின் வாயில் போட்டார்.

பிறகு அந்த தம்பதியர் கொண்டு வந்திருந்த பழங்களில் சிறிது நறுக்கி உண்ணுமாறு கொடுத்தார். சில நிமிடங்களிலேயே அந்த பெண்மணி குணமாகி விட்டார். ஸ்வாமியை மிகவும் பணிவுடன் பக்தியுடன் வணங்கி மகிழ்ச்சியுடன் விடை பெற்றனர்.

கர்ணம் சுப்பம்மாவின் இறுதிக் காலம் நெருங்கி கொண்டிருப்பதால், ஸ்வாமி அவரை பல நல்ல காரியங்களை செய்யுமாறு கூறினார். ஒரு நாள் ஸ்வாமி பெங்களுருக்கு சென்றிருந்த போத கர்ணம் சுப்பம்மாவின் உடல்நிலை மிகவும் சீர்குலைந்தது. ஆனால் நினைவு ஸ்வாமியைப் பற்றியே இருந்தது. பேச்சு மூச்சு நின்று விட்டது.

உடனே ஸ்வாமி எங்கிருந்தோ வந்து, “சுப்பம்மா சுப்பம்மா வாயை திற” என்று அன்புடன் கூறினார். இறந்த சுப்பம்மாவின் வாய் ஏதோ முனங்கியவாறே கைகள் ஸ்வாமிகள் பாதங்களை பற்றுவதற்கு நடுங்கின.

ஸ்வாமி கருணையுடன் சுப்பம்மாவின் கையை பிடித்து கொண்டு தன் வலது கையால் கங்கை நீரை அவரது வாயில் ஊற்றி ஆன்மாவிற்கு முக்தி அளித்தார்.

ஸ்வாமியின் உண்மையான பக்தையான சுப்பம்மா அவரது தாமரைப் பாதங்களில் தன் கண்களை நிறுத்தி அவருடன் ஐக்கியமானார்.

ஸ்வாமி பக்தர்களின் விருப்பபடி அவர்களது இஷ்ட தெய்வமாக தன்னை வெளிப்படுத்தி கொண்டார். சிலருக்கு கணபதியாகவோ, முருகனாகவோ, ராமராகவோ, கிருஷ்ணராகவோ, யேசுவாகவோ வெளிப்படுத்தி மகிழ்வித்தார்.

ஒரு சமயம் பெனுகொண்டாவிலிருந்து கிருஷ்ணமாச்சாரி என்ற வக்கீல் புட்டபர்த்திக்கு வந்தார். ஸ்வாமியை ஒரு தந்திரவாதி என்று நிரூபிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தன் தந்தையுடன் வந்திருந்தார். ஸ்வாமி அந்த வக்கீலை தன் அறைக்கு அழைத்தார். கண்களை மூடுமாறு கூறினார். அங்கு சீரடி சாய்பாபாவின் சமாதியில் பூஜைக் குரிய பொருட்கள் நிரம்பி பூக்களால் அலங்கரிக்கப்பட்ட சீரடி பாபாவை கண்டவுடன் வக்கீல் மிகவும் ஆச்சரியமடைந்தார்.

அவரை திரும்பி பார்க்குமாறு ஸ்வாமி கூறினார். அங்கு ஹனுமான் கோவில் வேப்பமரம், சிரடியியிலுள்ள பிற பகுதிகள், குருஸ்தான் போன்றவற்றை கண்டார். வக்கீல் ஒரு தீவிர சிரடி பாபா பக்தர். சீரடி பாபாவின் தரிசனம் இங்கு கிடைத்ததால் ஸ்வாமிகள் தாமரைப் பாதங்களில் விழுந்து வணங்கி மன்னிப்பு கேட்டார். தயைபுரியும் கருணா மூர்த்தியான ஸ்வாமி அவர் தோளைத்தட்டி மன்னித்தார்.

ஸ்வாமி மிகவும் சக்தி வாய்ந்தவர். யார் எந்த பெயரில் அழைத்தாலும் உடனே வந்து அருள் பொழிபவர்.

ஸ்ரீ சத்ய சாய் சத்ய நாராயண கதையின்
மூன்றாம் பகுதி இனிதே நிறைவடைகிறது.
ஸ்ரீ சாயியைப் பணிவோம். அனைவரும் அமைதியைப் பெறுவோம்.

# பகுதி 4 - பக்தர்களின் புகலிடம்

திருமதி சாக்கம்மா மிகப் பெரிய காபி தோட்டத்திற்கு உரிமையாளர். நல்ல தன்மையும், பக்தியும் கொண்ட அப்பெண்மணி ஏழைகளுக்கு உணவளித்து உடைகள் அளித்து ஏராளமான உதவிகளை செய்து வந்தார். அவரது தர்மத்தை உணர்ந்து மைசூர் மகாராஜா அப்பெண்மணிக்கு "தர்ம பாராயணீ" என்ற விருதை அளித்தார்.

ஒரு நாள் காலை 9 மணி அளவில் சாக்கம்மா காலை பூஜை செய்து கொண்டிருக்கும் போது அவர்களை உடனே காண வேண்டும் என பலர் வண்டிகளில் வந்திருப்பதாக வேலைக்காரன் வந்து கூறினான். சாக்கம்மா வெளியே வந்து பார்த்த போது "கைலாஸ் கமிட்டி" என்ற அறிவுப் பலகையுடன் ஒரு பழைய கார் வந்திருப்பதை கண்டார். அதன் முன் பரட்டை தலையுடன் 16 வயது இளைஞனும் அவர் பின்னால் தாடியுடன் உடலெல்லாம் திருநீறு பூசிக் கொண்டு மான் தோலின் மீது கம்பீரமாக வயதானவர் உட்கார்ந்திருப்பதையும் கண்டார்.

சாக்கம்மா வயதானவரை கால் அலம்பி பூக்கள் சொரிந்து, பழங்கள் அளித்த வரவேற்று பக்தியுடன் வணங்கினார். அந்த முதியவர் சாக்கம்மாவுடம் ஆயிரம் ரூபாய் செலுத்தி கைலாஸ் கமிட்டியில் அங்கத்தினராக வேண்டுமென கேட்டுக் கொண்டார். அவர் மகிழ்ச்சியுடன் பணம் கொடுக்க ரசீதும் பணத்தையும் அவரிடம் திருப்பி கொடுத்து மறுபடியும் முதியவர் அங்கு வரப்போவதாக கூறினார். சில வருடங்கள் கழிந்தன. ஆனால் கைலாஸ் கமிட்டியின் சுவடே தெரியவில்லை.

ஒரு நாள் சாக்கம்மா பெங்களூர் செல்ல வேண்டியிருந்தது. அவரது நண்பர் ஒருவரது வீட்டிற்கு சென்ற போது கலைந்த முடியுடன் அதே இளைஞன் அங்கிருப்பதைக் கண்டு அதிசயித்தார். பார்த்து கொண்டே இருக்கும் போது அந்த இளைஞன் முதியவராகவும், இளைஞனாகவும் உருமாறினார். சாக்கம்மா அதிசயத்தில் உறைந்துபோனார். அந்த சிறுவன் அருகில் சென்று கைலாஸ் குழு வில் என் வீட்டிற்கு நீ தானே வந்தாய் என்று கேட்டார்.

அதற்கு அந்தச் சிறுவன் பல வருடங்களுக்கு முன்பு தாங்கள் எனக்குஆயிரம் ரூபாய் தரவேண்டும். அதை வாங்கி செல்லவே வந்துள்ளேன் என்றார். அதை கேட்டு சாக்கம்மாவின் கண்களில் குளம் போல் கண்ணீர் நிறைந்தது. ஸ்வாமியின் காலில் விழுந்து அவரது அருளாசியைப் பெற்றார்.

ஒரு மதியம் ஸ்வாமி தமது படுக்கையில் படுத்து கொண்டு பக்தர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். திடீரென்று "சுட வேண்டாம், சுடாதே" என்று கத்தினார்.

உடனே கீழே விழுந்து மயங்கினார். ஒரு மணி நேரத்திற்கு பிறகு ஸ்வாமி எழுந்து உன்னுடைய துப்பாக்கி என்னிடமுள்ளது கவலை வேண்டாம் என்று தந்தியடிக்குமாறு பக்தர்களிடம் கூறினார்.

அவர்களில் ஒருவர் ஸ்வாமியிடம் துப்பாக்கி என்ற வார்த்தையை தபால் அதிகாரிகள் தடை செய்வார்கள் எனவே அந்த வார்த்தையை பிரயோகிக்க வேண்டாம் என்று கூறினார்.

அதனால் கருவி என்ற வார்த்தையை உபயோகித்து தந்தி அனுப்பப்பட்டது. எல்லோருக்கும் நடப்பது என்ன வென்றே புரியாமல் பாபாவிடம் கேட்டனர். ஸ்வாமி அவர்களிடம் விரைவில் தெரிந்து கொள்வீர்கள் என்று கூறினார்.

நான்கு நாட்களுக்கு பிறகு போபாலிருந்து இராணுவ அதிகாரியிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. சிலகாரணங்களுக்காக அவர் மனம் நொந்து தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்திருந்தார். தன் துப்பாக்கியை சோதிப்பதற்காக வானை நோக்கிஒரு முறை சுட்டார். அந்தநிமிடத்தில் இந்தியாவின் வேறொரு மூலையில் ஸ்வாமி, "சுடாதே சுடாதே" என்று அலறியுள்ளார்.

அந்த நேரத்தில் தளபதியின் வீட்டின் கதவை யாரோ தட்டியுள்ளனர். அந்த அதிகாரி துப்பாக்கியை படுக்கை அடியில் ஒளித்து வைத்து விட்டு கதவை திறந்தார். அங்கு அவரது பழைய வகுப்பு நண்பர் மனைவி வேலையாட்களுடன் அவரை காண வந்திருந்தார். அவர்களை உள்ளே அழைத்தார். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு மற்றொரு நண்பரை சந்திப்பதற்காக விடை பெற்று சென்றனர்.

அவர்கள் வெளியேறிய பிறகு அதிகாரி கதவின் உள் தாளை போட்டு விட்டு துப்பாகியைத் தேட சென்றார். ஆனால் கிடைக்க வில்லை. மறுபடியும் கதவு தட்டும் சத்தம் கேட்டு திறந்தபோது ஒரு தந்தி வந்திருந்தது. அதில் "உன் கருவி என்னிடமுள்ளது கவலை வேண்டாம் பாபா" என்று எழுதியிருந்தது.

நம் ஸ்வாமி அவரை வணங்கும் பக்தர்களை என்றும் கைவிடமாட்டார். அவரை அழைத்த மாத்திரத்தில் உண்மை, சரியான செயல், அமைதி, என்பு என்ற நான்கு கரங்களுடன் உதவி புரிய உடனே ஓடி வருவார். அவரின் மஹிமை வார்த்தைகளில் அடங்காது. மேற் கூறிய நிகழ்ச்சியில் அந்த அதிகாரியின் மனைவி ஸ்வாமியின் தீவிர பக்தை.

ஸ்ரீ சத்ய சாய் சத்ய நாராயண கதையின்
நான்காவது பகுதி இனிதே நிறைவடைகிறது.
ஸ்ரீ சாயியைப் பணிவோம். அனைவரும் அமைதியைப் பெறுவோம்.

# 5 – ஆம் பகுதி கருணையே உருவான ஸ்வாமி

ஒரு சமயம் ஸ்வாமி பெங்களூரில் ஒரு வீட்டிற்கு சென்றார். அவரை தரிசனம் செய்வதற்காக ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர். பலர் ஸ்வாமிக்கு அளிப்பதற்காக பழங்கள் பூக்களை கொண்டு வந்திருந்தனர். மற்றவர்கள் ஸ்வாமியின் அற்புத லீலைகளையும் கருணையைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர்.

ஒரு ஏழை செருப்பு தைப்பவர் இதை கேட்டு கொண்டிருந்தார். அவரது மனதில் ஓர் அழகிய எண்ணம் தோன்றியது. இந்த அவதாரத்தை தரிசனம் செய்ய விருமபினார். அருகிலுள்ள தோட்டத்திலிருந்த ஒரு ரோஜா மலரை பறித்து கூட்டத்தில் நுழைந்து ஸ்வாமி அமர்ந்திருக்கும் இடம் நோக்கி நகர்ந்தார். அவர் ஸ்வாமியை எட்டி பார்த்த போது ஸ்வாமியும் வெளியே பார்த்தார். இருவர்களுடைய கண்களும் சந்தித்த போது அடங்கி கொள்ள முடியாத அன்பு செருப்பு தைப்பவர் மனதில் நிரம்பி வழிந்தது.

ஸ்வாமி அன்புடன் அவரை அருகில் வருமாறு அழைத்தார். செருப்பு தைப்பவர் அவர் அருகில் சென்று ரோஜா மலரை அளித்தார். ஸ்வாமி அன்புடன் பெற்று கொண்டு, அவரது தாய் மொழியான தமிழில், "உனக்கு என்ன வேண்டும்" எனக் கேட்டார். இதனை எதிர்பாராத செருப்பு தொழிலாளி, "ஸ்வாமி தாங்கள் என் வீட்டிற்கு வர வேண்டும்" என்று கூறினார். அவசியம் வருகிறேன் என்று ஸ்வாமி அழைப்பை ஏற்று கொண்டார்.

ஆனந்த கண்ணீர் வழிந்தோட ஸ்வாமியின் தாமரைப் பாதங்களில் விழுந்து வணங்கினார். அவரது மகிழ்ச்சியில், எப்போது ஸ்வாமி அவர் வீட்டிற்கு வருவார் என்பதைக் கேட்க மறந்து விட்டிருந்தான். ஸ்வாமி புறப்பட்டு சென்ற பின் இந்த கேள்விகள் அவன் மனதில் தோன்றின. பல நாட்கள் ஆயினும் ஸ்வாமி அவனது குடிசைக்கு வரவில்லை.

ஒரு நாள் செருப்பு தைப்பவன் கிழிந்து உடைந்த செருப்பு ஒன்றை தைத்து கொண்டிருக்கும்போது தெருவில் கார் ஒன்று வந்து நின்றது. காவல்காரர்களின் வண்டி என நினைத்து தன் உடைமைகளை அள்ளிக் கொண்டு ஒடுவதற்கு தயாரானான். அவனை துரத்தவே காவலர்கள் வந்திருப்பதாக நினைத்தான். ஸ்வாமி காரிலிருந்து இறங்கி பயப்படவேண்டாம் என்று கூறி அவனை காரில் ஏறி கொள்ளுமாறு கூறினார்.

பேச இயலாத நிலையிலுள்ள அவனை காரில் ஏற்றி கொண்டு அவனது குடிசையை நோக்கி செல்ல காரோட்டிக்கு வழி காட்டி போகச் செய்தார்.

குடிசையை அடைந்தவுடன் செருப்பு தொழிலாளி காரைவிட்டு இறங்கி உள்ளே சென்று மனைவியிடம் பாய் விரிக்குமாறு கூறி விரைவில் வெளியே வந்து ஸ்வாமியை வரவேற்றான். ஸ்வாமி பாயில் வந்து அமர்ந்தார். அப்பொழுது, ஸ்வாமிக்கு கொடுப்பதற்கு தன் குடிசையில் ஒன்றுமே இல்லையே என்று கையை பிசைந்து மனம் தவித்தான்.

அவனது கவலையை அறிந்த ஸ்வாமி, "தான் கொடுப்பதற்காகவே அங்கு வந்துள்ளதாகவும் அவன் அன்பை தவிர தனக்கு எதுவும் வேண்டாம்" என்றும் கூறினார்.

கையை அசைத்து இனிப்புகளையும் பழங்களையும் வர வழைத்து அங்கு கூடியிருந்தவர்கள் அனைவருக்கும் ஸ்வாமி அளித்தார். பிறகு திருநீற்றை தோற்றுவித்து செருப்பு தைப்பவர் நெற்றியில் இட்டு, "இப்போது நான் உன்னிடமிருந்து விடை பெறுகிறேன். ஆனால் எப்போதும் உன்னிடமே இருப்பேன்" என்று கூறிச் சென்றார். அவன் ஏதும் பதிலுறைப்பதற்கு முன்பே காரில் ஏறி ஸ்வாமி சென்று விட்டார். அவனது குடிசையை ஸ்வாமி கோவிலாக்கி விட்டார்.

ஒரு சமயம் ஸ்வாமி திருச்சராப்பள்ளிக்கு சென்றிருந்த போது அவரைப்பற்றிய தவறான வதந்திகளை சிலர் பரப்ப முற்பட்டனர். அன்று மாலை அங்கு கூடியிருந்த கூட்டத்தினரிடையே பேசும் போது அங்குள்ள ஒரு பிச்சைக்காரனை மேடைக்கு அழைத்தார். அவன் ஒரு பிறவி ஊமை என்பதை அனைவரும் அறிவர். அவனிடம் ஸ்வாமி, "உன் பெயரென்ன?" என்று வினவினார். பிறவி ஊமையான அந்த பையன், "வெங்கடநாராயணா" என்று சத்தமாக கூறினான். ஸ்வாமியைப் பற்றிய பொய்யான வதந்தியை பரப்பி வந்த மக்கள் வெட்கித் தலை குனிந்து ஸ்வாமியை வணங்கினர். ஸ்வாமியின் அற்புத லீலைகள் ஏராளம்.

ஒரு சமயம் திருவண்ணமலையில் ஸ்வாமி அம்ருதானந்தாவின் கடும் நோயை குணப்படுத்த சில மருந்துகளை தோற்றுவித்து அளித்தார். மற்றொரு சமயம் டாக்டர் பகவந்ததின் மகனுக்கு ஸ்வாமியே அறுவைச் சிகிச்சை செய்தார். அதற்காக ஸ்வாமி தோற்றுவித்திருந்தார். அறுவைச் சிகிச்சை கருவிகள் இப்போதும் டாக்டர் பகவந்தமிடம் உள்ளன.

டாக்டர் சங்கர் என்பவர் ஸ்வாமியின் மற்றொரு தீவிர பக்தர். பலமுறை டாக்டர் சங்கரின் உடலில் புகுந்து மிகவும் சிக்கலான நோயைக் குணப்படுத்தி வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்தார்.

திரு. காருண்யானந்தா ஸ்வாமி ஆந்திராவில் ஒரு ஆஸ்ரமம் வைத்திருந்தார். அதன் மருத்துவமனையில் ஸ்வாமி பாபாவின் படத்தை மாட்டியுள்ளார்.

ஒரு சமயம் பரிதாபாமான கருவுற்ற பெண்மணி உதவிகள் நாடி ஆஸ்ரமத்திற்கு வந்தாள்.

மருத்துவமனையில் அப்பெண்மணியை தனியே விட்டு விட்டு பணிப் பெண்கள் இரவு காட்சி சினிமா கண்பதற்காக படத்திற்கு சென்று விட்டிருந்தனர். அன்றிரவு அப்பெண்மணிக்கு பிரசவ வலி ஏற்பட்டு தவித்தாள். உதவியின்றி அப்பெண்மணி தவிப்பதை கண்ட ஸ்வாமி, அவ்வறையில் மாட்டியுள்ள படத்திலிருந்து இறங்கி வந்து நல்ல முறையில் குழந்தை பெற உதவினார். சாய் மாதா பிறந்த குழந்தையை குளிப்பாட்டி சுத்தப்படுத்தி பால் அருந்த தாயருகே கிடத்தினார்.

பணிப்பெண்கள் திரும்பி வந்து தங்கள் வேலைகளை புதிய ஒருவர் செய்திருப்பதைக் கண்டு வியந்தனர். அப்பெண்மணியிடம் அதுப்பற்றி கேட்க, அவள் ஸ்வாமியின் படத்தை காட்டி சாய் மாதா வந்து உதவியதாகக் கூறினாள். அவரே நாராயணமூர்த்தி னெ அவர அறிய மாட்டார்.

ஸ்ரீ சத்ய நாராயணா மறுபடியும் அவதரித்து நம்மை காப்பாற்றி கொண்டிருக்கிறார். அவரை நம்பும் பக்தர்களை அவர் என்றும் காப்பாற்றுகிறார். நம் பல பிறவிகளில் செய்த புண்ணியத்தினாலேயே இன்று நாம் அவரை தரினம், ஸ்பரிசனம், சம்பாஷனை (உரையாடுகிறோம்) செய்கிறோம்.

ஸ்வாமியின் பிறவி குணம் அன்பு, தர்மம், பக்தி வழிகளில் நடக்கும் ஒவ்வொருவரையும் அவர் காத்து வருகிறார். அவரே ஈஸ்வரன், மகாவிஷ்ணு, தந்தை மற்றும் அல்லாவும் ஆவார்.

இதுபோன்று பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா இறைவனின் பல உருவங்களையும் பெற்று அவ்வாறாகவே திகழ்வார். தம் பக்தர்களுக்கு அருள் பொழிந்து அவர்களின் வேண்டுதல்களையும் நிறைவேற்றுவார். உண்மையும், தர்மமும், அமைதியும் அன்புமில்லாவிடில் நாம் கல்விபயனற்றது சத்யம், தர்மம், அமைதி, அன்பு இல்லா விட்டால் ஈகையும் பொருளுதவியும் மதிப்பற்றவை. சத்யம், தர்மம், அமைதி, அன்பு இல்லா விட்டால் நற்காரியங்கள் எனப்படுபவன பயனற்றவை.

சத்யம், தர்மம், அமைதி அன்பு இவையே சனாதன தர்மத்தின் நான்கு தூண்களாகும். இறைவனை என்றும் நினைத்து கொண்டிருக்க வேண்டும் என பகவான் நினைவுறுத்தி, இறைவன் நாமமே நமக்கு உய்வளிக்கும் என்பதையும் கூறுகிறார்.

உண்மையான அன்புடனும், பக்தியுடனும் இறைவன் ஸ்ரீ சத்ய சாய், சத்திய நாராயணணை வழிபடுகின்றனலே அனைவருக்கும் அவர்களின் துயரங்களும் கவலைகளும் நீங்கி, மகிழ்ச்சியும் அமைதியும் நிறைந்தவாழ்க்கை அமையும்.

இவ்வாறாக ஸ்ரீ சத்ய சாய், சத்ய நாராயண கதை
இனிதாக முடிவடைகிறது.
ஸ்ரீ சாயியைப் பணிவோம். அனைவரும் அமைதியைப் பெறுவோம்.



*அன்புக்குரிய பகவான் கருணையுடன், வியாழக்கிழமை 7ந் தேதி பிப்ரவரி மாதம் 2002 ல் பிரசாந்தி நிலையத்தில் டாக்டர் எச்.எஸ். பட் மூலமாக ஆசீர்வதித்த கதை.*

*மிகவும் அன்புக்குரிய பகவான் இந்த கதையை இரண்டாம் முறையாக வியாழன் 22.10.2009 இல் பிரசாந்தி நிலையத்தில் ஆசீர்வதித்தார்.*

# சர்வ தர்ம மந்திரம்

**ஓம் தத் சத் நாராயண து, புரோஷேத்தம குரு து**
**சித்த புத்த து ஸ்கந்த விநாயாக**
**சவிதா பாவக து, ஸவிதா பாவக து**
**பிரம்ம மத்த து, எகோவ சக்தி து, ஏசு பிதா பிரவு து**
**ருத்ர விஷ்ணு து, ராம கிருஷ்ண து**
**ரஹிம் தா து, ரஹிம் தா து**
**வாசுதேவ கோ விஷ்வ ரூப து, சிதாநத்த ஹரி து**
**அத்வீதிய து அகால நிர்பய ஆத்மலிங்க சிவ து**
**ஆத்மலிங்க சிவ து, ஆத்மலிங்க சிவ து**

*ஓம்கார ரூபனே, நாராயணனே, மனித வடிவான இறைவனே*
*பரிபூரண மானவனே நீயே, புத்தர், சுப்ரமண்யர், கணேசர்,*
*சூரிய நெருப்பும் நீயே, பிரம்மனும் நீயே, படைத்தவனும் நீயே*
*சக்தி ஸ்வருபமானவனே, தாயே, ஏசுவின் தந்தையும் நீயே,*
*ருத்ரனும் நீயே, மாற்றுபவனே காக்கும் விஷ்ணுவே,*
*ராமனும் கிருஷ்ணனும் நீயே நீயே ரஹீம்,*
*கொடுப்பவனும், விளைவிப்பவனும் எல்லாம் நீயே*
*எல்லோரையும் காக்கும், எங்கும் நிறைந்து வியாபித்துள்ள*
*விஷ்ணுவும் நீயே மாயையை நீக்கும் ஹரி நீயே,*
*கருணைகடலே ஒப்பற்றவனே, காலத்தை கடந்தவனே,*
*பயமறியாதவனே நீயே சிவன், லிங்கத்தை தோற்றுவிப்பவன்,*
*உருவமற்ற ஸ்வரூபியே.*

# ஆரத்தீ

**ஓம் ஜெய் ஜகதிச ஹரே**
**ஸ்வாமி ஸத்ய சாயி ஹரே**
**பக்த ஜன சம்ரக்ஷக x2**
**பர்த்தி மஹேஸ்வர**
**ஓம் ஜெய் ஜகதீச ஹரே**

*பிரபஞ்சத்தின் தலைவனுக்கு வெற்றி, துயரங்களையும்,*
*தீமைகளையும் வாழ்விலிருந்து நீக்கி பக்தர்களை காக்கும்,*
*பர்த்தியின் தலைவனுக்கு, இறைவனுக்கு வெற்றி.*

**சஷி வதனா ஸ்ரீ கரா சர்வ ப்ராண பதே**
**ஸ்வாமி சர்வ ப்ராண பதே**
**ஆஸ்ரித கல்ப லதிகா x2**
**ஆபத் பாந்தவா**
**ஓம் ஜெய் ஜகதீச ஹரே**

*முழு நிலவு போன்று ஒளிர்பவனே, நன்மையே தருபவனே*
*சாயிநாதனே, உள்ளிருந்து வாழ சாந்தியளிப்பவனே*
*தங்களை சரணமடைந்தவர்களின் தெய்வத் துணையாக இருப்பவரே*
*உறவும் நண்பனும் காப்பவனுமாகி தீமையிலிருந்து*
*வருத்தங்களிலிருந்து காப்பவனே,*
*உலக நாயகனே உனக்கு ஜயமுண்டாகட்டும்.*

**மாதா பிதா குரு தெய்வமு மரி அந்தயு நீவே**
**ஸ்வாமி மரி அந்தயு நீவே**
**நாத பிரம்ம ஜகந்நாதா X2**
**நாகேந்திரா சயனா**
**ஓம் ஜெய் ஜகதீச ஹரே**

*சாய் மாதாவே, தந்தையே உன்னத குருவே*
*உயர்ந்த தெய்வமே நீயே எங்களுக்கு தெய்வம்*
*ஒலி வடிவானவனே, அரவணையில் துயில்பவனே.*

**ஓம்கார ரூப ஓஜஸ்வி ஓம் சாய் மகாதேவா**
**சத்ய சாய் மஹா தேவா**
**மங்கள ஆரத்தி அந்து கோ +2**
**மந்தர கிரிதாரி**
**ஓம் ஜெய் ஜகதீச ஹரே**

*உன்னதமானவனே, தெய்வங்களுக்கு எல்லாம் தெய்வமே*
*சாய்நாதனே, பிரம்ம ஸ்வரூபமே, அஞ்ஞானத்தை நீக்கும் ஒளியே,*
*ப்ரபஞ்ச நாயகனே மந்தாரமலையில் வசிப்பவனே,*
*கிரிதரனே உனக்கு என்றும்வெற்றியே.*

(கீழேயுள்ள வருகளையும், கடைசி வரிகளையும்
3 முறை விரைவாக பாடவும்)

**நாராயண நாராயண ஓம்**
**சத்ய நாராயண நாராயண நாராயண ஓம்**
**நாராயண நாராயண ஓம்**
**சத்ய நாராயண நாராயண ஓம் +2**
**ஓம் ஜெய் சத்குரு தேவா**

*ப்ரணவ ஸ்வரூபிய என ஸ்ரீ ச்ய சாய் நாராயணனின்*
*நாமத்தை உச்சரிக்கவும் உன்னத குரு,*
*உயர்ந்த இறைவனுக்கே என்றும் மங்களம்.*

**ஓம் சாந்தி சாந்தி சாந்திஹி**

# ஸமஸ்த லோகா

**ஸமஸ்த லோகா சுகினோ பவந்து +3**
**ஓம். சாந்தி சாந்தி சாந்திஹி**

*அனைத்து உலகில் உள்ள அனைத்துயிர்களுக்கும்*
*நன்மையும் அமைதியும் நிலவட்டும்.*

**ஜெய் போலோ பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா ஜி கி ஜெய்!**

# விபூதி மந்திரம்

**பரமம் பவித்திரம் பாபா விபூதிம்**
**பரமம் விஸித்திரம் லீலா விபூதிம்**
**பரமார்த்த இஷ்டாத்த மோக்ஷ ப்ரதானம்**
**பாபா விபூதிம் இதம் ஆஸ்ரயாமி**
**ஓம் சாந்தி சாந்தி சாந்திஹி**


*இறைவன் ஸ்ரீசத்ய சாய் நாதனின் உயர்ந்த விபூதியில்*
*அடைக்கலமாகிறேன். இந்த விபூதியே நான் அடைய விரும்பும்*
*இறை நிலையை அளிக்கும்.*

# தங்களிடம் வேண்டுவது என்ன?

சாயி நாதனே, தங்களிடம்கேட்பதற்கு ஒன்றுமில்லை
அடைய விரும்புபம் அனைத்தையும் நான் அடைந்துள்ளேன்.
நினைக்கும் மனமே தங்கள் அருளாளல் காண்பதற்கான
கண்களும், கேட்பதற்கான காதும் தங்கள் அருளியவை
பரந்த நிறைந்த உலகம் என் முன்னே என்னை
வெளிப்படுத்த போதுமானவை இதுவும் உன் ஆசியே
என்றும் உன்னிடம் வேண்டுகிறேன்.
உன்னை ஆராதிப்பதும் உன் அருளாலேயே
நான் வேண்டுவது ஒன்றுமில்லை,
ஏற்கனவே எல்லாம் அளித்துள்ளாய்.
உள்ளும் புறமும் நீயே நிறைந்துள்ளாய்
இதை நான் என்றும் இழக்க விரும்பவில்லை
உன்னருளே போதும் வேறொன்றும் விரும்பேன்
உன்னருளை உணரவை
என்னுடைய வெற்றிகளைனத்தும், திறமைகளும்
உன்னருளை காண்பதற்கே

## சாய் ராம்

Copyright (English) 2002. Prasanthi Jyoti.
Translated into TAMIL by Sai Kishore
Website: http://www.sathyasaikatha.com
Email: prasanthijyoti@gmail.com



**என்னை நோக்கி ஒரு அடி எடுத்தால்**

**நான் உங்களை நோக்கி**

**நூறு அடி எடுத்து வருவேன்.**